மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி.
முன்னிலை–திரு.C.கருப்பசாமி, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9 ஆம் நாள், வியாழக்கிழமை,
அசல் வழக்கு எண்.178/2017
[CNR No:TNTT06- 000225-2017]
-----

லெட்சுமி ...வாதி

/எதிர்/

தங்கவேல் ...பிரதிவாதி

இவ்வழக்கு 25.03.2026 அன்று என்முன்பு இறுதி விசாரணைக்கு வரப்பெற்று வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கொம்பையா அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.S.சரவணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

**1)** பிராது தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்வதன் மூலமாய், பிராது தபசில் சொத்திலிருந்து பிரதிவாதியும், அவர் செய்துள்ள ஆக்கிரமிப்பையும் அகற்றி வாதி வசம் காலிசுவாதீனம் ஒப்படைக்க கோரியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கேட்டும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்–</u>**

தாவா சொத்து வாதியின் தந்தை பழனி பெயருக்கு பட்டா எண்.401ன் படி பாத்தியப்பட்டு ஆண்டு அனுபவித்து வந்து வாதிக்கு கடந்த 15.02.2007 அன்று வாதியின் தந்தை பதிவு நன்கொடை ஏற்பாட்டு ஆவண எண்.268/2007 மூலம் தபசில் சொத்தை பாத்தியப்படுத்தி கொடுத்து, வாதி தபசில் சொத்தை காலியிடமாக அனுபவம் செய்து வருகிறார். பிரதிவாதி கடந்த 08.04.2017ல் அத்துமீறி நுழைந்து தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து, ஆழ்துளை கிணறு

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.04.09 16:43:12 +0530

போட்டுள்ளார். வாதியின் தந்தை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும், மாவட்ட ஆட்சியருக்கு 10.04.2017 ல் புகார் கொடுத்தும், வழக்கு சொத்தில் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் கிடையாது, பிரதிவாதிக்கு, வாதியின் தந்தை வழி தாத்தா திரு.மாடன் 04.11.1978 ல் சர்வே எண்.46/4 ல் செண்ட் 16 கிரையம் கொடுத்துள்ளார். பிரதிவாதி கிரைய பத்திரத்தில் உள்ளதை விட கூடுதலான விஸ்தீரணத்திற்கு பட்டா எண்.203 பெற்று, தாவா சொத்தை அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்து வருவதால் 29.08.2017 ல் வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி, பிரதிவாதி 01.09.2017 ல் பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு கொடுக்காததால் வாதி, பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**3) பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்–**

பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் வாதியின் தந்தை பழனி வாதி பெயருக்கு ஏற்பாடு ஆவணம் பதிவு செய்து வைத்திருப்பது செல்லத்தக்கதல்ல. அந்த ஆவணத்தை எழுதிவைக்க வாதியின் தந்தைக்கு உரிமையோ, அதிகாரமோ கிடையாது என்றும், தாவா சொத்தில் 08.04.2017 ல் அத்துமீறி நுழைந்து போர்வெல் போட்டு ஆக்கிரமித்துள்ளதாக சொல்வது உண்மையல்ல. பிராது சங்கதிகளை மறுத்துரைத்து உண்மையில், பிராது தபசில் சொத்தை உள்ளடக்கி ஒரு பகுதியை வாதியின் தகப்பனாரை பெற்ற பாட்டன் மாடன் என்பவரிடமிருந்து 04.11.1978 ல் 16 செண்ட் நிலத்தை புல எண்.46/4 ஐ பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார். பிரதிவாதி பெற்ற கிரைய சொத்திற்கு சர்வே செய்து தனிப்பட்டா பெற்றுள்ளார். அந்த சொத்தின் தென்கிழக்கு மூலையில் போர்வெல் 1981 ம் ஆண்டு அமைத்துள்ளார். **கிரையம் பெற்ற இடத்தை பிரதிவாதி கடந்த 39 ஆண்டு காலமாக சுவாதீனமாக எந்த வில்லங்கமும் இன்றி அனுபவித்து வருகிறார்.** அதில் வீடு கட்டி எஞ்சியுள்ள காலிமனைகளில்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.04.09 16:43:24 +0530

பிரதிவாதி அனுபவிக்கிறார். தான் கிரையம் பெற்ற மனையில் மேற்கு பக்கம் தேசிய நெடுஞ்சாலைக்கு கீழ்பக்கம் 10 செண்ட் இடத்தை 30.06.2011 ல் தனது மகள் கோமதியம்மாளுக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார். கிரையம் பெற்ற கோமதியம்மாள் கட்டிடம் கட்டி கனரா வங்கிக்கும், கடைகளுக்கும் வாடகைக்கு கொடுத்துள்ளார். பிராது சொத்து மாலுக்குள் வாதியின் எந்த இடமும் இல்லை. **வாதியின் பாட்டனார் மாடன் என்பவர் இந்த பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த 16 செண்ட் நிலம் நீக்கி மீதமுள்ள பகுதி மேற்படி மாடன் வசம் கையிருப்பாக இருந்து அதை வாரிசு நிலைமையில் அவரது மகன் பழனி அனுபவித்து வந்தார்.** பிராது தபசில் சொத்தில் வாதிக்கு எந்த உரிமையோ, அனுபவமோ கிடையாது. வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 11.09.2017 ல் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார். **வாதி குறிப்பிடும் தபசில் சொத்து இந்த பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 16 செண்ட் இடத்திற்குள் தான் அமைந்துள்ளது.** அதில் ஒரு பகுதியை தான் ஷையார் மகள் கோமதியம்மாள் கிரையம் வாங்கியுள்ளார். வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**<u>4) பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்—</u>**

வாதியின் வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்திற்கு பாதிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தாவா கிராமத்தில் உள்ள சர்வே எண்.46/4 லட்டரில் 1 ஏக்கர் 6 செண்ட் நிலத்தில் வடமேல் மூலையில் உள்ள 16 செண்ட் நிலத்தை 04.11.1978 ல் கிரைய ஆவண எண்.1186/1978 மூலம் வாதியின் தாத்தாவான மாடன் என்பவரிடம் கிரையம் பெற்றுள்ளார். கிரையம் பெற்ற 16 செண்ட் நிலத்தில் 10 செண்ட் நிலத்தை பிரதிவாதியின் குமாரத்தி கோமதியம்மாள் என்பவருக்கு 30.06.2011 ல் கிரைய ஆவண எண்.1861/2011 மூலம் கிரையம் கொடுத்து, அதில் அவர் கடை மற்றும் வீடு கட்டி குடும்பமாக வசித்து வருவதால் மீதமுள்ள 6 செண்ட் நிலத்தை பிரதிவாதி, தனது

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.04.09 16:43:31 +0530

குமாரத்தியான கோமதியம்மாளின் குமாரர் கணேஷ் கிறிஸ்டோபருக்கு 04.01.2012 ல் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவண எண்.2/2012 ஏற்படுத்தி பின்னர் உயில் ஆவணத்தை ரத்து செய்து, பிரதிவாதியின் மற்றொரு குமாரத்தியான கோவிலம்மாள் குமாரர் கபிலேஷ் என்பவருக்கு 22.01.2016 ம் தேதியிட்டு உயில் ஆவண எண்.5/2016 எழுதிவிட்டு, பிரதிவாதி இறந்த பின்னர் மைஷ உயில் ஊர்ஜிதமாகும். 1980 ம் வருடம் ஆழ்துளை கிணறு அமைத்திருந்தார். பிராது தபசில் சொத்து ஸ்தலத்தில் கிடையாது. வழக்கை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**5) வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதியின் எதிர்வழக்குரை ஆகியவைகளின் அடிப்படையில் இவ்வழக்கில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன–**

1) தபசில் சொத்தை பொறுத்து வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
2) தபசில் சொத்தை பொறுத்து வாதி கோரிய காலிசுவாதீன பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
3) வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

**6) இவ்வழக்கில்,** வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதி தரப்பு வழக்கிற்கு கூடுதல் ஆதரவாக வாதியின் தந்தை பழனி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. வா.சா.1 குறுக்குவிசாரணையின் போது பி.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரைக்கு ஆதரவாக பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.2 முதல் பி.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களும், நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதி தரப்பு

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.09 16:43:37 +0530

எதிர்வழக்குரைக்கு கூடுதல் ஆதரவாக கோமதியம்மாள் என்பவர் பி.சா.2 ஆகவும், கோவிலம்மாள் என்பவர் பி.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பில் எழுத்துப்பூர்வ வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

<u>**நீதிமன்ற பரிசீலனையும், தீர்வுகளும்**</u>

<u>**7) 1 வது எழுவினாக்கான தீர்வு–**</u>

**7(1)** தாவா சொத்து வாதியின் தந்தை பழனிக்கு பட்டா எண்.401 ன்படி பாத்தியப்பட்டு வாதி பெயருக்கு நன்கொடை ஏற்பாட்டாவணம் எண்.268/2007 ன்படி கிடைக்கப்பெற்று வாதி காலியிடமாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதி அத்துமீறி 08.04.2017 ல் ஆழ்துளை கிணறு போடப்பட்டிருப்பதால் புகார் மனு கொடுத்து, 29.08.2017 ல் வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பி, பிரதிவாதி பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**7(2)** பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையில், பிராது தபசில் சொத்தை உள்ளடக்கி ஒரு பகுதியை வாதியின் தகப்பனாரை பெற்ற பாட்டன் மாடன் என்பவரிடமிருந்து 04.11.1978 ல் 16 செண்ட் நிலத்தை புல எண்.46/4 ஐ பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், பிரதிவாதி பெற்ற கிரைய சொத்திற்கு சர்வே செய்து தனிப்பட்டா பெற்றுள்ளார் என்றும், அந்த சொத்தின் தென்கிழக்கு மூலையில் போர்வெல் 1981 ம் ஆண்டு அமைத்துள்ளார் என்றும், கிரையம் பெற்ற இடத்தை பிரதிவாதி கடந்த 39 ஆண்டு காலமாக சுவாதீனமாக எந்த வில்லங்கமும் இன்றி அனுபவித்து வருகிறார் என்றும், வாதியின் பாட்டனார் மாடன் என்பவர் இந்த பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த 16 செண்ட் நிலம் நீக்கி மீதமுள்ள பகுதி மேற்படி மாடன் வசம் கையிருப்பாக இருந்து அதை

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.09 16:43:47 +0530

வாரிசு நிலைமையில் அவரது மகன் பழனி அனுபவித்து வந்தார். வாதி குறிப்பிடும் தபசில் சொத்து இந்த பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 16 செண்ட் இடத்திற்குள் தான் அமைந்துள்ளது. கூடுதல் எதிர்வழக்குரையில் 1980 ல் ஆழ்துளை கிணறு அமைத்துள்ளதாகவும், பிரதிவாதி உயில் எழுதி வைத்து அவர் இறப்பிற்கு பின்னர் நடைமுறைக்கு வரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**7(3)** வாதி வா.சா.1 ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வாதியின் பெயருக்கு ஏற்பட்ட 15.02.2007 ம் தேதியிட்ட நன்கொடை ஆவணத்தின் நகல் வா.சா.ஆ.1 ஆகவும், பட்டா எண்.401 வா.சா.ஆ.2 ஆகவும், பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்ட 04.11.1978 ம் தேதிய கிரைய ஆவணத்தின் நகல் வா.சா.ஆ.3 ஆகவும், வாதியின் தந்தை மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் மனு வா.சா.ஆ.4 ஆகவும், பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.203 வா.சா.ஆ.5 ஆகவும், வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.6 ஆகவும், பிரதிவாதி பெற்றுக்கொண்ட ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1 குறுக்குவிசாரணையில் **"எனது தகப்பனாரின் அப்பா பெயர் மாடன் என்றால் சரிதான். எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் வேறு நபர்கள் இருக்கிறார்கள் என்றால் 2 அத்தைகள் இருக்கிறார்கள். எனக்கு எனது தகப்பனார் நன்கொடையாக 3 செண்ட் நிலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு எனது தாத்தா மாடன் 16 செண்ட் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனது அப்பா என்னிடம் சொன்னதன் மூலம் தெரியும். எங்கள் இடத்திற்கு தெற்கே 16 செண்ட் இடம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.46/4 ல் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. எனக்கு பாத்தியப்பட்ட 3 செண்ட் நிலம் எந்த உட்பிரிவில் உள்ளது என்றால் 46/4C ல் உள்ளது. எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.46/4C ல் 08.04.2017 ல் பிரதிவாதி அத்துமீறி நுழைந்து ஆழ்துளை கிணறு அமைத்துள்ளார் என்பது தான் எனது வழக்கு என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனு**

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.09 16:44:46 +0530

**காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆழ்துளை கிணறு பிரதிவாதியால் 1981ல் போடப்பட்டது என்றால் 08.04.2017ல் தான் போடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 சர்வே எண்.46/4Cக்கு கூட்டுப்பட்டா என்றால் சரிதான். கூட்டுப்பட்டாவில் கண்டுள்ள 5 நபர்களுக்கு எந்த இடங்கள் என்று பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். அவசிய தரப்பினரை கட்சி சேர்க்கவில்லை என்று எதிர்கட்சி செய்கிறார் என்றால் பிரதிவாதி 16 செண்ட் நிலத்தில் தானம் கொடுத்துள்ளார். எங்கள் இடத்தில் தானம் கொடுக்கவில்லை என்பதால் அவரை கட்சி சேர்க்கவில்லை. பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பட்டாவில், அவருக்கு பாத்தியப்பட்ட 16 செண்ட் நிலத்தை காட்டிலும் கூடுதலாக 3 செண்ட் நிலம் காட்டப்பட்டுள்ளது என்றும், அந்த கூடுதலான 3 செண்ட் நிலம் எனக்கு பாத்தியப்பட்டதாக கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பட்டாவில் 3 செண்ட் நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும், வருவாய்துறையினருக்கு பாத்தியப்பட்ட வேறு நிலம் என்றால் சரிதான். எனது வழக்குரையில் தபசில் சொத்திற்கு நான்கு மால் விவரத்தில் பிரதிவாதியின் நிலத்திற்கு தெற்கு என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**7(4)** வாதியின் தந்தை வா.சா.2 ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2 குறுக்குவிசாரணையில் **"வாதிக்கு எவ்வளவு இடம் நன்கொடையாக எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் 3 செண்ட் இடம். எனக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண் என்ன வென்றால் சர்வே எண்.46/4C. அதன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 5 செண்ட். வாதிக்கு எழுதிக்கொடுத்த சொத்திற்கு வடக்கே என்ன உள்ளது என்றால் தங்கவேலுக்கு பாத்தியப்பட்ட 16 செண்ட் நிலம் உள்ளது. நான் எழுதிக்கொடுத்த சொத்திற்கு தெற்கே என்ன உள்ளது என்றால் எனது கையிருப்பு நிலம் உள்ளது. மேற்கே**

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.04.09 16:44:53 +0530

**என்ன உள்ளது என்றால் தேசிய நெடுஞ்சாலை உள்ளது. சர்வே எண்.46/4 ம், சர்வேஎண்.46/4C ம் தனித்தனி என்றாலும், இரண்டிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.46/4C ல் எனது இடத்தை தவிர்த்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தை கோருவதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் பிரதிவாதிக்கு 16 செண்ட் மட்டும் தான் பாத்தியம்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**7(5)** பிரதிவாதி பி.சா.1 ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியமளித்து 04.11.1978 ம் தேதிய பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் நகல் பி.சா.ஆ.2 ஆகவும், கதவு எண்.2/36 க்குரிய வீட்டு வரி ரசீது பி.சா.ஆ.3 ஆகவும், மின்கட்டண ரசீது பி.சா.ஆ.4 ஆகவும், கோமதியம்மாள் பெயரில் உள்ள கிரைய ஆவணம் நகல் பி.சா.ஆ.5 ஆகவும், வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பு பி.சா.ஆ.6 ஆகவும், பதில் அறிவிப்பு பி.சா.ஆ.7 ஆகவும், பதில் அறிவிப்பை வாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை பி.சா.ஆ.8 ஆகவும், நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆகவும், ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகவும், சர்வேயர் வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.1 குறுக்குவிசாரணையில் **"சர்வே எண்.46/4 ல் வாதியின் தாத்தா மாடனிடம் 1978 ம் ஆண்டு 16 செண்ட் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். கிரையம் பெற்ற சொத்தில் மேற்கு பக்கம் 10 செண்ட் நிலத்தை மகளுக்கு 30.06.2011 ல் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த 10 செண்டில் மகள் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறாள் என்றால் சரிதான். மீதமுள்ள 6 செண்ட் நிலம் எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் 6 செண்ட் மற்றும் வழக்கு சொத்தும் எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. எனக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட 6 செண்டுக்கு தென்பக்கம் தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 நான் கிரையம் பெற்ற பத்திரம் என்றால் சரிதான். பி.சா.ஆ.2 கிரைய**

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.09 16:45:01 +0530

**பத்திரத்தில் சொத்து விவரத்தில் என் கையிருப்பு நிலத்திற்கு மேற்கும், வடக்கும், மதுரை ரோட்டிற்கு கிழக்கு, சுடலையாண்டி நிலத்திற்கு தெற்கும் என்று மால் விவரத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் தேசியநெடுஞ்சாலைக்கு கிழக்கு, என் கையிருப்பு வீடு மனை வகையறாவிற்கு மேற்கு, பழனி காலிமனைக்கு வடக்கு, சுடலை காலிமனைக்கு தெற்கு என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பழனி காலிமனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது பழனி வாதியின் அப்பா என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பாரா எண்.4 ல் நான் கிரையம் பெற்ற 16 செண்ட் நிலம் நீக்கி மீதமுள்ள பகுதி மாடன் வசம் கையிருப்பாக இருந்து அது வாரிசு நிலைமையில் அவரது மகன் பழனி அனுபவம் செய்து வந்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை நான் பத்திரம் மூலம் உரிமை கோருகிறேனா, அல்லது பட்டா மூலம் உரிமை கோருகிறேனா என்றால் பத்திரம் 16 செண்ட் பாத்தியம், மீதமுள்ள தாவா 3 செண்ட் எனது அனுபவத்தில் இருந்து வருகிறது"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**7(6)** பிரதிவாதியின் மகள் பி.சா.2 ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.2 குறுக்குவிசாரணையில் **"எதிர்வழக்குரையில் எனது தந்தை கிரையம் பெற்ற 16 செண்ட் நிலம் நீக்கி மீதமுள்ள பகுதி மாடன் கையிருப்பாக இருந்து, அதை வாரிசு நிலைமையில் அவர் மகன் பழனி அனுபவித்து வந்தார் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள பழனி என்பவர் இந்த வழக்கின் வாதியின் தந்தை என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் பெற்ற 16 செண்டில் மேல்புறம் 10 செண்ட் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்தது போக மீதமுள்ள 6 செண்ட் தான் எனது தகப்பனாருக்கு பாத்தியம் என்றால் சரிதான். 6 செண்ட் போக சர்வே எண்.46/4 ல் வேறு எவ்வித பாத்தியமும் கிடையாது என்றால் சரிதான். எனது தந்தை உயிருடன் தான்**

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.09 16:45:08 +0530

**இருந்து வருகிறாரா என்றால் எனது தந்தை உயிருடன் தான் இருந்து வருகிறார். இந்த வழக்கு எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட 6 செண்ட் நிலத்திற்கு கோரப்படவில்லை என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**7(7)** பிரதிவாதியின் மற்றொரு மகள் பி.சா.3 ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.3 குறுக்குவிசாரணையில் **"எனது நிரூபண வாக்குமூலத்திற்கு வழக்கறிஞருக்கு எனது தகப்பனார் தான் சொன்னார் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் தகப்பனார் இறந்த பின்னர் உயில் ஊர்ஜிதத்திற்கு வந்தது என்று சொல்லியுள்ளேன். எனது தந்தை உயிருடன் தான் இருந்து வருகிறார் என்றால் சரிதான்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**7(8)** மேற்படி வாதி, பிரதிவாதி தரப்பில் எழுத்துப்பூர்வ வாதுரை தாக்கல் செய்யப்பட்டது. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. பிரதிவாதி, வாதியின் தந்தை வழி தாத்தா மாடனிடம் வா.சா.ஆ.3 மற்றும் பி.சா.ஆ.2 ன்படி சர்வே எண்.46 நிர் 4 லட்டர் ஹெக்டேர் 0.43.5 க்கு ஏக்கர் 1 செண்ட் 6 ல் வடமேல் மூலையில் செண்ட் 16 க்கு மால் என் கையிருப்பு நிலத்திற்கு மேற்கும், வடக்கும், மதுரை ரோட்டிற்கு கிழக்கும், சுடலையாண்டி நிலத்திற்கு தெற்கும், இதற்குட்பட்ட நிலம் கிரையம் பெற்றார் என்பது வாதியும், பிரதிவாதியும் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதியாகும். பிரதிவாதி மேற்படி வா.சா.ஆ.3 மற்றும் பி.சா.ஆ.2 ன்படி கிரையம் பெற்ற சொத்தின் ஒரு பகுதியான 10 செண்டை பி.சா.ஆ.5 ன் படி அவரது மகளான கோமதியம்மாளுக்கு தற்சமயம் UDR படி அயன் புஞ்சை சர்வே 46/4A ஹெக்டேர் 0.08.0 தேசிய நெடுஞ்சாலைக்கு கிழக்கு, என் கையிருப்பு வீடு மனை வகையறாவிற்கு மேற்கு, பழனி காலிமனைக்கும் வடக்கு, சுடலை காலிமனைக்கும் தெற்கு என்பது வாதி, பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதியாகும். பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் வாதியின் பாட்டனார் மாடன் என்பவர் இந்த பிரதிவாதிக்கு

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.09 16:45:14 +0530

கிரையம் செய்து கொடுத்த 16 செண்ட் நிலம் நீக்கி மீதமுள்ள பகுதி மேற்படி மாடன் வசம் கையிருப்பாக இருந்து அதை வாரிசு நிலைமையில் அவரது மகன் பழனி அனுபவித்து வந்தார் என்றும், பி.சா.1 முதல் பி.சா.3 சாட்சிகள் எதிர்வழக்குரை சங்கதிகளை ஒப்புக்கொண்டு சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையிலும், சாட்சியத்திலும் ஒப்புக்கொண்டதன் படி It is settled law that admission made in pleadings is judicial admission and has strong evidentiary value U/s.58 of Indian Evidence Act. மேற்படி பிரதிவாதி தரப்பின்படி அவர் கிரையம் பெற்ற 16 செண்ட் நிலம் நீக்கி மீதமுள்ள நிலத்தினை வாதியின் தந்தை வாரிசு வழியில் அனுபவித்து வருகிறார் என்று வியக்கதக்கமாய் பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது. பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையை வாதி தரப்பில் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. பி.சா.1, பி.சா.2 குறுக்குவிசாரணையில் பி.சா.ஆ.2, பி.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள நான்குமால் விவரத்தை ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பு வாதுரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள முன்தீர்ப்பு **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் – Mr.Sandip Dang /VS/ The Tahsildar, Velachery – W.P.No.14231 of 2024**

> It is well settled that the discrepancy in the matter of Survey Number will not affect a person's title and what matters is only the four boundaries. It has been consistently held that boundaries will ultimately prevail over.

**7(9)** மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில் பி.சா.ஆ.2, பி.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள நான்குமால் எல்கை பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால், நான்குமால் எல்கைக்குட்பட்ட நிலத்தை தவிர கூடுதலான விஸ்தீரணத்திற்கு உரிமை கோர முடியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட உட்பிரிவு எண் குறித்து பிரச்சனை ஏற்பட்டால் அந்த பத்திரத்தின் நான்கு மால் மேல் ஓங்கி நிற்கும் என்ற முன்தீர்ப்பு படி வா.சா.ஆ.1

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.04.09 16:45:20 +0530

எல்கைமால் படி வாதி பிராது சொத்தில் உரிமை கோருகிறார். பி.சா.1 குறுக்குவிசாரணையில் கிரையம் பெற்ற சொத்தில் மேற்கு பக்கம் 10 செண்ட் நிலத்தை மகளுக்கு 30.06.2011ல் கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த 10 செண்டில் மகள் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறாள் என்றால் சரிதான். மீதமுள்ள 6 செண்ட் நிலம் எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் 6 செண்ட் மற்றும் வழக்கு சொத்தும் எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. எனக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட 6 செண்டுக்கு தென்பக்கம் தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட பி.சா.ஆ.2, பி.சா.ஆ.5 ஆவணத்தில் கண்ட விஸ்தீரணம் 16 செண்டுக்கு நான்குமால் எல்லைக்கு தென்பக்கம் தாவா சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். When there is a discrepancy between measurements in a title deed and survey land record, measurements and boundaries mentioned in registered title deed generally prevail over Revenue Records. பிரதிவாதி கூடுதலாக உள்ள தாவா சொத்து தனது அனுபவத்தில் இருப்பதை ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதி எதிரிடை அனுபவம் கோரவில்லை. மேலும் சட்டத்தால் வரையறுக்கப்பட்ட காலவரையறை அனுபவம் செய்து வந்ததை நிரூபிக்கவில்லை. வாதி தரப்பில் வாதுரையுடன் தாக்கல் செய்த முன்தீர்ப்பு **மாண்புமிகு உச்சநீதிமன்றம் – Indira /VS/ Arumugam and Anr. AIR 1999 SC 1549**

> It is, therefore, obvious that when the suit is based on title for possession, once the title is established on the basis of relevant documents and other evidence unless the defendant proves adverse possession for the prescriptive period, the plaintiff cannot be non-suited.

**7(10)** மேற்படி முன்தீர்ப்பை பரிசீலனை செய்ததில் பிரதிவாதி எதிரிடை அனுபவம் இந்த வழக்கில் கோரவில்லை. எதிரிடை அனுபவத்திற்கு சட்டத்தால் வரையறுக்கப்படும் காலமான 12 ஆண்டுகள் வாதிக்கு தெரிய அனுபவித்து

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.09 16:45:25 +0530

வந்திருப்பதை நிரூபிக்கப்படவில்லை என்பதால் வாதியின் தாவா சொத்தை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்ய முடியாது என்பதாகும்.

**7(11)** மேற்படி வாதி தரப்பில் தாவா சொத்து பி.சா.ஆ.2 ன் படி பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்படவில்லை என்று பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ள பி.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட விஸ்தீரணத்திற்கு விரோதமாக வா.சா.ஆ.5 பட்டா ஆவணம் பெற்று தனது அனுபவத்தில் இருப்பதாக பி.சா.1 சாட்சியம் அளித்து, நீ.ம.சா.ஆ.1 ஆணையர் அறிக்கையில் தாவா சொத்து சர்வேயர் சகிதம் அளந்து பார்த்ததில் தாவா சொத்து சர்வே எண்.46/4C ல் வருகிறதா, அல்லது 46/4A ல் வருகிறதா என்பதற்கு அளந்து பார்த்ததில் சர்வே எண்.46/4A தெற்கு 46/4C உள்ளது புல வரைபடத்தின்படி பிரதிவாதியின் கிழமேல் மற்றும் வடபக்கம் அளவு 30 மீட்டர் ஆகும். கிழமேல் தென்பக்கம் அளவு 24.2 மீ தென்வடல் கீழ்பக்கம் 25.4 மீ தென்வடல் மேல்பக்கம் 30.2 மீ அமைந்துள்ளது. போர்வெல் சர்வே எண்.46/4A ல் தென்கிழக்கு மூலையில் H புள்ளிக்கு அருகே அமைந்துள்ளது. சர்வே எண்.46/4A மொத்த விஸ்தீரணம் 753.38 ச.மீ ஆகும். இதற்கு செண்டு கணக்கில் 18.6 ஆகும், ஹெக்டேர் கணக்கில் 0.07.53 ஆகும். தாவா போர்வெல் சர்வே எண்.46/4 ஏல் தெற்கே 18.6 செண்ட் முடியும் எல்லையான நீ.ம.சா.ஆ.2 ல் H I லைனில் தென்கிழக்கு மூலையில் H புள்ளிக்கு அருகில் உள்ளது. நீ.ம.சா.ஆ.1, நீ.ம.சா.ஆ.2 ன் அடிப்படையில் தாவா சொத்து என சொல்லப்படும் போர்வெல் ஆனது 18.6 செண்ட் முடியும் எல்லையில் அமைந்திருப்பதால் பிரதிவாதியால் அமைக்கப்பட்ட போர்வெல் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பி.சா.ஆ.2 நிலத்திற்குள் போடப்படவில்லை என்பது நீ.ம.சா.ஆ.1, நீ.ம.சா.ஆ.2 ன் அடிப்படையில் தெரிய வருகிறது. பிரதிவாதி எதிர்வழக்குரையிலும், பி.சா.1 முதல் பி.சா.3 வரையிலான குறுக்குவிசாரணையில் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் தாவா சொத்து பிரதிவாதி கிரையம் பெற்ற பி.சா.ஆ.2 கிரைய பத்திரத்திற்கு தெற்கில் வாதியின்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.04.09 16:45:33 +0530

தந்தை மாடன் வாரிசு வழியில் கிடைக்கப்பெற்று அனுபவம் செய்து வந்திருப்பதும், அந்த சொத்தை வாதிக்கு வா.சா.ஆ.1ன் அடிப்படையில் நன்கொடை கொடுக்கப்பட்டிருப்பதை வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

7(12) பிரதிவாதி சாட்சியத்தில் தனது அனுபவத்தில் இருப்பதாக குறிப்பிடுவதற்கு பி.சா.ஆ.2 தனது தந்தைக்கு கிரையம் பெற்ற 16 செண்டில் 10 செண்ட் பி.சா.ஆ.5ன்படி எனக்கு கிரையம் கொடுத்தது போக மீதமுள்ள 6 செண்ட் பாத்தியம் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.1 பிரதிவாதியானவர் சாட்சியத்தில் 6 செண்ட் போக தாவா சொத்து தனது அனுபவத்தில் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருப்பதால் வாதி வழக்குரையில் தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிக்கு எதிராக கோரும் விளம்புகை பரிகாரத்திற்கு தாவா சொத்தின் உரிமையை வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.46/4C என கண்டிருப்பதை நான்குமால் எல்கையின் அடிப்படையில் தாவா சொத்து சர்வே எண்.46/4A ல் அமைந்துள்ளது என்பதை Mr.Sandip Dang /VS/ The Thasildar, Velachery என்ற முன்தீர்ப்பின் அடிப்படையில் நான்கு மால் எல்கையை பிரதிவாதி தரப்பு சாட்சிகள் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் தாவா சொத்து வா.சா.ஆ.1ல் கண்ட நான்குமால் எல்கைக்கு உட்பட்ட சொத்து என்பது பிரதிவாதிக்கு எதிராக நிரூபித்துள்ளதால் தாவா சொத்தை பொறுத்து வாதி கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று 1வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**8) 2 வது எழுவினாக்கான தீர்வு–**

மேற்படி 1வது எழுவினாவிற்கு தீர்வு கண்டதன் அடிப்படையில் தாவா சொத்து வாதிக்கு வா.சா.ஆ.1ன் அடிப்படையில் கிடைக்கப்பெற்றது என்பதும், அதில் கண்ட நான்கு மால் விவரத்திற்குள் தாவா சொத்து சர்வே எண்.46/4A ல் அமைந்துள்ளது என்பதை சர்வேயர் சகிதம் நீதிமன்ற ஆணையர் மூலம் நீ.ம.சா.ஆ.1, நீ.ம.சா.ஆ.2ன் அடிப்படையிலும் பி.சா.1 முதல் பி.சா.3 வரையிலான

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.09 16:45:42 +0530

சாட்சிகள் மூலமும், பி.சா.ஆ.2, பி.சா.ஆ.5 ன் கிரைய ஆவணத்தில் கண்ட நான்கு மால் எல்கையை ஒப்புக்கொண்டு அதற்கு தெற்கே தாவா சொத்து அமைந்துள்ளது என்பதை ஒப்புக்கொண்டு அளித்துள்ள சாட்சியத்தின் அடிப்படையில், தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதி எதிரிடை அனுபவம் கோராமல் தாவா சொத்து தான் கிரையம் பெற்ற பி.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட விஸ்தீரணத்தில் பி.சா.ஆ.5 மகளுக்கு எழுதிக்கொடுத்த கிரையம் போக மீதமுள்ள 6 செண்டும், தென்புறம் உள்ள தாவா சொத்து தனது அனுபவத்தில் இருப்பதாக சாட்சியம் அளித்திருப்பதால் வாதி, பிரதிவாதிக்கு எதிராக கோரும் சுவாதீன மீட்பு பரிகாரத்திற்கு தாவா சொத்தின் விஸ்தீரணமும், நான்கு மால் விவரமும் பிரதிவாதிக்கு எதிராக நிரூபிக்கப்பட்டு, தாவா சொத்து பிரதிவாதி அனுபவத்தில் இருப்பதை பிரதிவாதி ஒப்புக்கொண்டிருப்பதால் வாதி, பிரதிவாதிக்கு எதிராக கோரும் சுவாதீன மீட்பு பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என 2 வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**9) 3 வது எழுவினாக்கான தீர்வு–**

1, 2 எழுவினாக்கள் வாதிக்கு சாதகமாக தீர்வு கண்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று 3 வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**10) இறுதியாக,** பிராது தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், பிராது தபசில் சொத்தில் பிரதிவாதி செய்துள்ள ஆக்கிரமிப்பை தீர்ப்பு தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் அகற்றி வாதி வசம் காலிசுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிட்டு வாதியின் வழக்கு அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.04.09 16:45:49 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் எழுதி விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 09.04.2026 இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.04.09 16:45:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

<u>வாதி தரப்பு சாட்சிகள் –</u>

வா.சா.1 – லட்சுமி

வா.சா.2 – பழனி

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் –</u>

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 15.02.2007 ம் தேதி பிராது தபசில் சொத்தை பொறுத்து வாதி பெயரில் உள்ள நன்கொடை ஆவணம் சார்பதிவக நகல் |
| வா.சா.ஆ.2 | வாதி பெயரில் உள்ள கணினி கூட்டு பட்டா எண்.401 |
| வா.சா.ஆ.3 | 04.11.1978 ல் பிரதிவாதி பெயரில் உள்ள பதிவு கிரைய ஆவணம் சார்பதிவக நகல் |
| வா.சா.ஆ.4 | 10.04.2017 ல் பிரதிவாதி மீது வாதியின் தந்தை பழனி என்பவர் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கொடுத்த புகார் மனுக்கான ஒப்புகை சீட்டு வளையதள பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.5 | பிரதிவாதி பெயரில் உள்ள கணினி பட்டா எண்.203 |
| வா.சா.ஆ.6 | 29.08.2017 ல் வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் |
| வா.சா.ஆ.7 | 01.09.2017 ல் மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் –</u>

பி.சா.1 – தங்கவேல்

பி.சா.2 – கோமதியம்மாள்

பி.சா.3 – கோவிலம்மாள்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.04.09 16:46:03 +0530

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் –</u>**

| | |
|---|---|
| பி.சா.ஆ.1 | காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனு |
| பி.சா.ஆ.2 | 04.11.1978 ம் தேதிய கிரைய பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் |
| பி.சா.ஆ.3 | க.எண்.2/36 வீட்டிற்கு செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் எண்ணம் 7 |
| பி.சா.ஆ.4 | பிரதிவாதி வீட்டிற்குரிய மின்இணைப்பு எண்.301 க்கான மின்கட்டண ரசீது எண்ணம் 2 |
| பி.சா.ஆ.5 | 30.06.2011 ல் பிரதிவாதி தனது மகள் கோமதியம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.6 | 29.08.2017 ல் வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு |
| பி.சா.ஆ.7 | 11.09.2017 ல் பிரதிவாதி அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் |
| பி.சா.ஆ.8 | பதில் அறிவிப்பை வாதியின் வழக்கறிஞர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை |

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்–</u>**

| | |
|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை |
| நீ.ம.சா.ஆ.2 | நீதிமன்ற ஆணையரின் வரைபடம் |
| நீ.ம.சா.ஆ.3 | நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள சர்வேயர் வரைபடம் |

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.09 16:46:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
கோவில்பட்டி,
அ.வ.எண்.178/2017
[CNR No.TNTT06-000225-2017]
வரைவு/நேரிய/தீர்ப்புரை
நாள்-09.04.2026